| | 2 |
|---|---|
| Liberté • Égalité • Fraternité<br>RÉPUBLIQUE FRANÇAISE<br>MINISTÈRE DE LA JUSTICE | # உரிமைகள் பிரகடனம்<br>## காவலில் வைக்கப்பட்ட நபருக்கு கொடுக்கப்படும்<br>**குற்றச்செயல் மற்றும் ஏற்பாடு செய்த ஒழுக்க அழிவு, போதை பொருள் கடத்தல் மற்றும் தீவிரவாத செயல்களை தவிர (குற்றவியல் நடைமுறை குறியீடு 63-1, 706-73 மற்றும் 706-88 சட்டத்தின் கீழ் உள்ள)** |

**கீழ் இருக்கும் தகவல்களை நீங்கள் புரிந்துகொள்ளும் மொழியில் உங்களுக்கு கிடைக்கவேண்டும்**.

***நீங்கள் காவலில் இருக்கும் காலம் முற்றிலும்.இந்த ஆவணத்தை வைத்து கொள்ளலாம்***

நீங்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று உங்களுக்கு தெரிவிக்கின்றோம் ஏனெனில் நீங்கள் சிறை தண்டனைகுறிய குற்றச்செயல் அல்லது ஏற்பாடு செய்த ஒழுக்க அழிவு செய்தீர் அல்லது செய்ய முயற்சி செய்தீர் என்று சந்தேகத்திற்குரிய ஒன்று அல்லது பலகாரணங்கள் உங்களுக்கு எதிராக இருக்கின்றது.

நீங்கள் சம்மந்தப்பட்ட இந்த குற்றத்தின் சட்ட குறிப்பு, நடைபெற்ற திகதி மற்றும் இடத்தை தெரிந்துகொள்ளும் உரிமை உங்களுக்கு இருக்கின்றது. அத்துடன் காவலில் வைக்க படுவதற்கு உள்ள காரணங்களையும் நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

நடந்த அந்த சம்பவங்களைப் பற்றி நீங்கள் சொல்வது 24 மணிநேரத்திற்கு நீங்கள் காவலில் இருக்கும் பொழுது கேட்கப்படும்.

அந்த தவணைக்கு பிறகு, அரசாங்க தரப்பு வக்கீல் அல்லது நீதிபதி மேலும் 24 மணி நேரம் உங்களை காவலில் வைத்திருக்க முடிவு கூறலாம். சாத்தியமானால், நீங்கள் தண்டனை அதிகாரிக்கு முன் காண்பிக்க படுவீர்கள், தேவைபட்டால் ஒளி ஒலி கலந்தாய்வு மூலமாக செயல்படலாம்.

விதிவிலக்காய், மற்றும் ஆய்வு அல்லது அறிவுறுத்தல்களுக்கு தேவை என்றால், இரண்டு முறை 24 மணி நேரம் மேலதிகமாக உங்கள் காவல் நேரத்தை, சுதந்திரம் மற்றும் காவல் நீதிபதி அல்லது நீதிபதி கூறுதல் பிறகு, கூட்டலாம்.

இருந்தாலும், முதல் 48 மணி நேரத்திற்கு பிறகும், ஆய்வுக்கு தேவை பட்டால், சுதந்திரம் மற்றும் காவல் நீதிபதி அல்லது நீதிபதி முடிவால், காவல் நேரம் மேலும் ஒரு முறை 48 மணி நேரத்திற்கு தொடரலாம்.

காவலில் இருக்கும் நேரத்தின் முடிவில், நீங்கள், அரசாங்க தரப்பு வக்கீல் அல்லது நீதிபதி முடிவில், ஒன்று நீங்கள் தண்டனை அதிகாரிக்கு முன் காண்பிக்க படலாம் அல்லது விடுவிக்க படலாம். முதலாம் சூழ்நிலை என்றால், உங்கள் காவல் நேரம் 72 மணி நேரம் தாண்டவில்லை என்றால், உங்கள் காவல் நேரம் முடிந்து அதிகபச்சம் 20 மணி நேரத்திற்க்குள், உங்களை ஒரு நீதிபதி முன் நிறுத்துவார்கள்.

மேலும் உங்களுக்கு இருக்கின்ற உரிமைகள் என்னவென்று தெரிவிக்கபடுகிறது:

**சில நபருக்கு தெரிவித்தல்**

நீங்கள் காவலில் இருக்கும் காரணங்களை உங்கள் உடன் வழக்கமாக வாழும் நபருக்கு தொலைபேசி மூலம் தெரிவிக்கலாம் அல்லது உங்கள் பெற்றோருக்கு அல்லது உங்கள் சகோதர சகோதரிகளுக்கு, அல்லது உங்கள் பாதுகாவலர் அல்லது காப்பாளர்.

நீங்கள் உங்கள் முதலாளி இடமும் சொல்லலாம்.

நீங்கள் வெளிநாட்டை சேர்ந்தவராக இருந்தால், உங்கள் நாட்டின் தூதரக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

.

எனினும் விசாரணை தேவைகளுக்கு அரசாங்க தரப்பு வக்கீல் அல்லது நீதிபதி உங்கள் விண்ணப்பங்களை எதிர்க்க வாய்புக்கள் உள்ளன.

தவிர்க்கமுடியாத காரணங்கள் இருந்தால் தவிர, இந்த செய்முறைகள், உங்கள் கோரிக்கை நேரத்தில் இருந்து அதிகபட்சம் 3 மணி நேரத்திற்கு ஏற்படும்.

**ஒரு மருத்துவரால் பரிசோதிக்கபடலாம்**

நீங்கள் காவலில் இருக்கும் நேரம் தொடக்கத்தில் அல்லது காவலில் இருக்கும் நேரம் அதிகரித்ததும் நீங்கள் ஒரு மருத்துவ பரிசோதனை கேட்கலாம். முதல் ஏற்படும் நேர அதிகரிப்பாக இருந்தால், உங்களுக்கு கண்டிப்பாக மருத்துவ பரிசோதனை உண்டு மற்றும் உங்கள் காவல் நேரம் அதிகரித்தால் நீங்கள் மறுபடியும் மருத்துவ பரிசோதனை கேட்கலாம் என்று உங்களுக்கு இருக்கின்ற உரிமையை அறிவிப்பார்கள்.

**அறிக்கைகளை செய்ய, கேள்விகளுக்கு பதிலளிக்க அல்லது மௌனமாக இருக்க**

உங்கள் பெயர் விவரங்களை தெரிவித்த பிறகு, விசாரணை தோறும், உங்களுக்கு இருக்கும் உரிமைகள்:
- அறிக்கைகளை செய்ய
- உங்களிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலளிக்க
- அல்லது மௌனமாக இருக்க

**ஒரு வழக்கறிஞரின் உதவி பெறலாம்**

**<u>- வழக்கறிஞரை தேர்ந்து எடுப்பது</u>**

காவலில் இருக்கும் நேரம் தொடங்கியதும், மற்றும் காவலில் இருக்கும் நேரம் அதிகரித்தால், அந்த அதிகரிப்பு நேரம் தொடங்கும் போதே, நீங்கள் விருப்பப்பட்ட ஒரு வழக்கறிஞரை கேட்கலாம். நீங்கள் உங்களுக்கு விருப்பமான வழக்கறிஞரை தேர்ந்தெடுக்க முடியாத சூழ்நிலையிலோ அல்லது நீங்கள் தேர்ந்தெடுத்த வழக்கறிஞரை தொடர்ப்பு கொள்ள முடியாது என்றால், நீங்கள் ஒரு அரசாங்க இலவச

வழக்கறிஞரை கேட்கலாம்.

நீங்கள் அறிவித்த நபர் கூட உங்கள் வழக்கறிஞரை நியமிக்கலாம்: அப்படியானால் நீங்கள் அதை தெரியப்படுத்த வேண்டும்.

**<u>- வழக்கறிஞரின் உதவி</u>**

வழக்கறிஞர் செய்ய கூடியது:

- நம்பகத்தன்மையை உறுதிசெய்கின்ற நிலையில் ; உங்கள் இடம் 30 வினாடிகள் பேட்டி காணலாம். காவலில் இருக்கும் நேரம் அதிகரித்தால், மறுபடியும் அவரை சந்தித்து பேச, அதிகரித்தலின் தொடக்கத்திலேயே நீங்கள் கேட்கலாம்.
- நீங்கள் கோரிக்கையிட்டால், உங்கள் இடம் விசாரணைகளும், நேருக்கு நேர் நடைபெறும் நேரத்திலும் அவர் உங்களுக்கு துணையாக இருக்கலாம்.

**<u>- தலையீட்டிற்கு உள்ள நேரம்</u>**

புலன் ஆய்வு தேவைகளை முன்னிட்டு, உங்கள் விசாரணை உடனடியாக நடைபெற தேவைபட்டால், எழுத்து மூலம் அதற்கான காரணங்களை குறித்து, அரசாங்க தரப்பு வக்கீல் அல்லது நீதிபதி உத்தரவு இடலாம், உங்கள் விசாரணையை, உடனடியாக நடைபெறவேண்டும் என்று உங்கள் வழக்கறிஞர் வருவதற்கான இரண்டு மணி நேர தவணை முடியும் முன்னே தொடங்கலாம்.

உங்கள் வழக்கறிஞரின் தலையீடு, அதிகபச்ச நேரம் 48 மணி நேரத்திற்கு, தவிர்க்க முடியாத காரணங்களாலும், தள்ளப்படலாம் மற்றும் மாற்ற படலாம்.

## ஒரு மொழிபெயர்ப்பாளரின் உதவி

நீங்கள் பிரெஞ்சு மொழியை பேசுபவர் அல்லது புரிந்து கொள்பவராக இல்லை என்றால், உங்கள் விசாரணைக்கும், உங்கள் வழக்கறிஞர் உடன் முறையிடவும் உங்களுக்கு இலவசமாக ஒரு மொழிபெயர்ப்பாளர் உதவி கேட்க உரிமை இருக்கிறது.

## காவலில் இருக்கும் நேரத்தை நிறுத்துவதற்கான உரிமை

அரசாங்க தரப்பு வழக்கறிஞர் அல்லது நீதிபதி இடம், தண்டனை அதிகாரி, மேல் அதிகமாய் உங்களை காவலில் வைக்க வேண்டும் என்று முடிவெடுக்கும் போது அதை மேலதிகமாய் கூட்ட வேண்டாம் என்று நீங்கள் மறுப்பு தெரிவிக்கலாம்.

## உங்கள் கோப்பில் இருக்கும் சில பாகங்களை நீங்கள் பார்க்கலாம்

உங்கள் கோரிக்கையால் அல்லது உங்கள் வழக்கறிஞரின் கோரிக்கையால் பார்க்க, கேட்க கூடியது, அதிகபச்சம் உங்கள் காவல் நேரத்தை அதிகரிப்பதற்கு முன்:

- உங்களுடைய தடுப்பு காவலில் வைத்திருத்தல் அறிவிப்பு நிமிடங்கள் ஆவணம் ;
- உங்களை பரிசோதிக்க மருத்துவரின் சான்றிதழ் அல்லது சான்றிதழ்கள்.
- உங்கள் விசாரணைகளுக்குரிய ஆவணம் அல்லது ஆவணங்கள்.